**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**PW-3**

**OS. No. 344/2019**

**பெயர்: திரு.ரவிக்குமார்**

**தேதி : 16.08.2021**

**வாதி/ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் வாதி ஈஸ்வரமூர்த்தி எங்கள் தெருவில் குடியிருப்பதால் சிறுவயது முதலே பழக்கம். நான் செஞ்சுரி ரோட்டரி பிரிண்டிங்கில் மேனேஜராகப் பணிபுரிகிறேன். நான் பி.காம் படித்துள்ளேன். நான் இதற்கு முன்னர் வேறு புரோநோட் எழுதியதில்லை, வழக்கு புரோநோட் தான் எழுதியுள்ளேன். சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை, வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியமளிக்கிறேன். எனது சாட்சிய பிரமாண வாக்குமூலம் என் அறிவுறுத்தலின் பேரில் தான் தயார் செய்யப்பட்டது. வழக்கு புரோநோட் எழுதும் போது பழனிச்சாமிக் கவுண்டருக்கு 70 வயதிருக்கும். பழனிச்சாமிக் கவுண்டர் இட புரோக்கராவார். 05.04.2016 ல் பழனிச்சாமிக் கவுண்டர் புரோநோட் எழுத அழைத்ததன் பேரில் வந்தேன். பிரதிவாதியை எனக்குப் புரோநோட் எழுதும் போது தான் தெரியும். காலை 9 மணியளவில் புரோநோட் எழுதினோம். 500 ரூபாய் நோட்டுக்கட்டு 21 கட்டு கொடுத்தார். பிரதிவாதி அதை எண்ணிப் பார்த்துப் பெற்றக் கொண்டார். அன்றைய தினம் பழனிச்சாமிக் கவுண்டர் வசம் எவ்வாறு தொகை வந்தது என்று என்னிடம் சொல்லவில்லை. மற்றொரு புரோநோட் சாட்சியான மணியை எனக்கு அன்று தான் தெரியும். நான் வழக்கில் சொல்லியவாறு புரோநோட் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும், பழனிச்சாமிக் கவுண்டர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்

**சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது சாட்சியம் செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V BREZNEV Digitally signed by V BREZNEV
Date: 2021.08.16 17:31:01
+0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

Uploaded by Typist